# வான்வழிமூலம் புலிகள் தற்கொலைத் தாக்குதலை நடத்தலாம்!

விலை ரூபா 5. 00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 07 இதழ் 133
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 23 - 7 - 1995

## படையினர் அச்சம்

(கொழும்பு)
விடுதலைப்புலிகள் வான் வழி மூலம் தற்கொலைப் படைத் தாக்குதல்களை நடத்தலாம் என்று படையினர் மத்தியில சந்தேகம் எழுந்துள்ளதாக 'வெரித்தாஸ்' சிங்கள சேவை தெரிவித்தது.

'வெரித்தாஸ்' மேலும் தெரிவிக்கையில்: இலங்கை இராணுவத்துக்கு எதிராக விடுதலை புலிகள் வான்வழி தாக்குதல் நடத்தத் தொடங்கினாலும், 2வது உலக மகாயுத்தத்தில் யப்பான் மேற்கொண்ட வான்

(5ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி முகாம்களில் 45,000 படையினர் தரிப்பு

(கொழும்பு)
தற்பொழுது வடபகுதி படை முகாம்களில் 45 000 படையினர் தரித்துள்ளதாக பாதுகாப்பு செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் 45 000 படையினரும் நிலைகொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை, பொலநறுவை மாவட்டங்களில் 30,000த்திற்கும் அதிகமான படையினர் தரித்துள்ளனரெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். ஈ-சி

## எதிரியை பலவீனப்படுத்தியுள்ளோம்

# வீட்டுக்கு ஒருவரென நாட்டை காப்பதற்கு முன்வர வேண்டும்!

## இளம்பரிதி அழைப்பு

(யாழ்ப்பாணம்)
"நாங்கள் எதிரியை மிக மிகப் பலவீனப்படுத்தி இருக்கிறோம். பலவீனப்படுத்தியிருக்கிற எதிரியை மேலும் பலவீனப்படுத்துவதற்கு வீடடுக்கு ஒருவர் நாட்டைக் காக்க முன்வாருங்கள் என்று நாங்கள் பொதுமக்களிடம் எமது உரிமைக்குரலை முன் வைக்கிறோம், இதனால் ஒன்றிணைந்து நாம் விரைவில் தமிழீழத்தை மலர வைப்போம்" இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி தெரிவித்தார்.

(5ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி நோக்கி கடும் ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)
பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி நோக்கி நேற்று பிற்பகல் மேற்கொள்ளப்பட்ட கடும் ஷெல் தாக்குதலில் இரு மாணவர் உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று பிற்பகல் 2-45 மணியளவில் பலாலி முகாமிலிருந்து தொண்டமானாறு, கெருடாவில், வல்லைவெளி போன்ற பகுதிகளில் மக்கள் குடியிருப்புகளை நோக்கி கடுமையான ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

கெருடாவில் மூன்றும் சந்திப் பகுதியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் இம்

(5ம் பக்கம் பார்க்க)

## இரண்டாம் கட்டத் தாக்குதலுக்கு இராணுவம் திட்டமிட்டு வருகிறது

(கொழும்பு)
முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத் தாக்குதல் குறித்து தற்போது திட்டமிடப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்:

விடுதலைப் புலிகளை தோற்கடித்து யாழ் குடா நாட்டை கைப்பற்றுவதற்கான வலிமையும் துணிச்சலும் படையினருக்கு இருக்கிறது.

கடந்த 12 வருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தை திடீரென ஒரு முடிவுக்குக்

(5ம் பக்கம் பார்க்க)

## தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி உருவாகும்

(சென்னை)
தமிழகத்தில் தி.மு.க வும் காங்கிரஸிற்குமிடையே தேர்தல் கூட்டணி ஏற்படலாமென செய்திகள் தெரிவிக்கின்றன,

தேசிய முன்னணியிலிருந்து தி.மு.க. வெளியேறியதன் மூலம் காங்கிரஸுடன் கூட்டணி அமைக்கலாமென்ற செய்திகள் தமிழகத்தில பரவலாக அடிபடுகிறது.

எனினும் இச்செய்திகளை மறுத்த தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதி காங்கிரசுடன் கூட்டணி அமைக்கும் நோக்கம் தி.மு.க. விற்கு

(2ம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு ராணுவ நிபுணர்களுடன் படைத் தலைமை கலந்துரையாடல்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்ட இராணுவத்தின் முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை தொடர்பாக படைத்தலைமை வெளிநாட்டு இராணுவநிபுணர்கள், ஆலோசகர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளது.

கடந்த புதன்கிழமை இக் கலந்துரையாடல் நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க

(5ம்பக்கம் பார்க்க)

## புலிகளை அடக்குவது தமிழரை அடக்குவதாகும்

### குமார் பேட்டி

(லண்டன்)
இராணுவம் விடுதலைப்புலிகளை அடக்குவது என்று நினைப்பது தமிழ் மக்களை அடக்குவதற்கு ஒப்பாகும் என்று தமிழ் காங்கிரஸ்தலைவர் திரு. குமார் பொன்னம்பலம் பி. பி. சி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: இராணுவம் யாழ்ப்பாணத்தை கைப்பற்றினால், அங்கு தமிழர்கள் தொடர்ந்திருக்க மாட்டார்கள். விடுதலைப்புலிகளை தோற்

(2ம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ நிலையத்தை சுற்றிவளைத்து கொழும்பில் பொலிஸார் தேடுதல்!

### அமெரிக்க இளைஞன் கைது

[கொழும்பு]
கொழும்பில் தேசிய கிறிஸ்தவ மையமொன்றினுள் பொலிசார் நேற்று நுழைந்து திடீர் பரிசோதனை மேற்கொண்டு அமெரிக்க இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

இந்த அலுவலகத்தினுள் நுழைந்த பொலிசார் அங்கு பல இளம் தமிழ்ப் பெண்கள் பணி புரிவதை நோட்டமிட்ட பின்னர் அங்கு பணியாற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்

(5ம் பக்கம் பார்க்க)

## காங்கேசன் துறைமுகம் புனரமைக்கப்படும்

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் கடற் கரும்புலிகளால் அண்மையில் சேதப்படுத்தப்பட்ட காங்கேசன்துறை துறைமுகத்தை புனரமைப்பு செய்வதற்கான வேலைகள், அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் தற்போது ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

காங்கேசன்துறையில் தற்போது பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான பொலிஸ் உத்தியோகஸ்த்தர் ஏற்கனவே அங்கு அனுப்பப்

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சேவை

சகலவிசமான சதிரைகளும் உங்கள் வீட்டுக்குவந்து பின்னி தருபவர்கள். ராஜன் பின்னல் அகம் 286, ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம் சந்தி. (சி 1562)

### தேவை

செவ்வாய்க்குற்றமற்ற ஆனல் பாவம் கூடிய ஆண் பட்டதாரி ஆசிரியர்கள் எம்மிடம் உண்டு, இ. பாஸ்கரன் திருக்குமரன் மங்கள ஏஜன்சி இல 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை. (சி 1564)

வெற்றுஜாம் (JAM) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது ரேஸ்ட் லேன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் ஒழுங்கை யாழ்ப்பாணம். [ஏ-5115]

### அக்கரைச் சீமையில் நாவல் ரூபா 25/-

250 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையல் நாவல் 100 பக்கங்கள் மலிவு விலை ரூபா 25/- எங்கும் கிடைக்கும். (சி 1549)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரைப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை சாலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1533)

### 28·8·95 வரை செவ்வாய் மாற்றம்

வக்கிரச்சனி, யுத்தச் செவ்வாய் ஒன்றுக்கொன்று கெட்டபார்வை மீண்டுமொரு பாரிய யுத்தத்தை வடக்கில் ஏற்படுத்தும். சனிமாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. சதியா - கட்டுடை.
சி- 1565

## ★ சிறிலங்கா இராணுவத்தின் மக்கள் மீதான தாக்குதல்களுக்கு யாழ். இலக்கிய வட்டம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை மூலம் சிறிலங்கா இராணுவம் தமிழ்மக்கள் மீது கண்மூடித்தனமாக மேற்கொண்ட தாக்குதல்களைக் கண்டித்து யாழ். இலக்கிய வட்டம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: சிறிலங்கா இராணுவத்தினால் ஆரம்பிக்கப்பட்ட முன்னேறிப்பாய்தல் யுத்த நடவடிக்கையின் மூலம் உண்மையில்சாதாரண பொது மக்களே பாதிப்புற்றிருக்கின்றார்கள். தேவாலயம் ஒன்றில் தஞ்சம் புகுந்திருந்த 120 அப்பாவி பொதுமக்கள் புக்காரா விமான குண்டுவீச்சினால் உடல் சிதறி பலியாகினர். அதே இடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கடும் காயமுற்றனர்.

இவற்றைவிட தமிழ்மக்கள் நெருக்கமாக வாழுகின்ற குடியிருப்புகள் மீது குடாநாட்டின் பல்வேறு திக்கிலிருந்தும் மேற்கொள்ளப்பட்டுவரும் செல்வீச்சினாலும், விமான குண்டுவீச்சினாலும் ஏராளமான மக்கள் தமது சொத்துக்களையும் முற்றாக இழந்து இடம்பெயர்ந்து அகதிகளாக மாறிவிட்டனர். போதிய உணவும், சுகாதார, மருத்துவ வசதி இன்மையும் சூழ்ந்த தற்காலிக வதிவிடங்களில் அவர்கள் பயத்துடனும், பீதியுடனும் வாழ்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. சிறிலங்கா இராணுவம் இந்த கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கையினால் யாழ்ப்பாண குடாநாட்டின் 6½ இலட்சம் மக்களும் உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பெரும் பாதிப்புற்றுள்ளனர் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

யுத்தத்தின் மூலம் இந்த நாட்டின் பிரச்னைக்கு தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையை இலங்கை அரசு தொடர்ந்து கொண்டிருப்பது கண்டிக்கப்படத்தக்கது. கண்மூடித்தனமான இராணுவ நடவடிக்கைகள் மூலம் தமிழ் மக்களின் உயிர்களையும் உடமைகளையும் இந்த முன்னேறிப்பாய்தல் யுத்தநடவடிக்கை பறித்துவிளது.

சிறிலங்கா இராணுவத்தின் இந்த கண்மூடித்தனமான நடவடிக்கைகளை யாழ். இலக்கிய வட்டம் கடுமையாகக் கண்டிக்கின்றது. யுத்த நடவடிக்கைகள் மூலம் எந்த ஒரு தீர்வையும் காணமுடியாது. எனவே அரசியல் பேச்சுமூலம் இந்த நாட்டின் இரு இனங்களையும் சந்தோசமாக வாழ வழிவகுக்கவேண்டுமென சம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் யாழ். இலக்கிய வட்டம் கோருகின்றது. (வி)

## பீரங்கிப் படகு ரோந்தால் மீனவர் கடலுக்குச் செல்ல அச்சம்

(தாளையடி)

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசத்தில் கடற் படைப் பீரங்கிபடகுகளின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்பட்டன. இதனால் இப்பகுதி கடலில் கடற்தொழிலாளர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் 'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்த நாளிலிருந்து கடற்படைப்பீரங்கிப்படகுகளின் நடமாட்டம் இப்பிரதேச கடற்பரப்பில் குறைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
163-கி-சி

## இன்று பதவியேற்பு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மானிப்பாயில் நடைபெறவுள்ளது. -72

## யாழ். கல்வி வலய ஊழியர்க்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வி வலயம் 1, 2ன் அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், ஊழியர்க்கு மான நிதியம் சம்பந்தமான கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்படி. பளைக் கல்விக் கோட்டத்துக்கு நாளை திங்கட்கிழமை மு.ப 11 மணிக்கு பளை மத்திய கல்லூரியிலும் கரவெட்டி, பருத்தித்துறை கோட்டத்துக்கு நாளை பி. ப 1 மணிக்கு நெல்லியடி ம. ம. வித்தியாலயத்திலும் யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை கோட்டங்களுக்கு 25ம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப 1மணிக்கு யாழ் மத்திய கல்லூரியிலும், நல்லூர், வேலணைக் கோட்டங்களுக்கு செவ்வாய் பி. ப 2. 30க்கு யாழ். இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு 26ம் திகதி புதன்கிழமை பி.ப 1 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும் சாவகச்சேரி கல்விக் கோட்டத்துக்கு அதே தினம் பி. ப 3 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் கூட்டம் நடைபெறும். ர- சி

## காங்கேசன்

(1பக்க தொடர்ச்சி)

பட்டுள்ளார்கள் பொலிசாருக்குத் தேவையான வாகனங்களும் அங்கு அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்காக மூன்று பாரிய ஜெனரேட்டர்களும், மின்சாரப பகுதி ஊழியர்களும் அனுப்பப்பட்டுள்ளார்கள்

இதே நேரம் பலாலி இராணுவ முகாமில் உள்ள ஆஸ்பத்திரியை அபிவிருத்தி செய்வதற்காக 30 லட்சம் ரூபாவை சுகாதார அமைச்சு ஒதுக்கியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (வி-சி)

## கிறிஸ்தவ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தின் பேரில் கைது கைது செய்துள்ளனர்.

அலுவலகத்துள் நுழைந்த பொலிசார் வெடிப் பொருட்கள் இருக்கின்றனா என்று சோதித்த பின்னர் விடுதலைப் புலிகளுக்கு வெடிப்பொருட்கள் கொடுத்துதவுபவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கெனத் முடர்' என்ற அமெரிக்க இளைஞனை கைது செய்துள்ளதால் இந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த மதகுரு, ரின்சி பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நாற்பதக்கும் மேற்பட்ட பொலிசார் ஒவ்வொரு அறையாக பரிசோதித்தனர் ஒரு கம்பியூட்டர் முன் கெனத் அமர்ந்திருந்தார் கணணியில் சந்திரிகாவைக் குறிக்கும் இரத்தம் வடியும் வெண்தாமரை மலரும், அதன் அடியில் புலிகளுக்கு எதிராக இலங்கை இராணுவம் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கையில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டும் என சந்திரிகா கூறுவதாக இருந்த வசனங்களைப் பார்த்த பொலிசார் இக்கருத்துப் படத்தை வரைந்த கெனத் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்துதவுபவர் என்று தீர்மானித்ததன் பேரில் விசாரணை எதுவுமின்றி அவரைக் கைது செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையத்தில் பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வாவின் மனைவியும் கடமையாற்றுவதும் குறிப்பிடத்தக்கது. -ம-சி

## புலிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடித்த பின்பு அரசாங்கம் அரசியல் தீர்வும் காண்பது என்பதும் முடியாத காரியம்.

இலங்கை இராணுவம் தமிழ் மக்களை காப்பாற்றும் 'புரட்சி' இராணுவம் என்று சொல்லிக் கொண்டாலும் மக்கள் ஏற்கமாட்டார்கள். யுத்தம் ஆரம்பமாகியுள்ள நேரத்தில் அங்குள்ள மக்கள் புலிகளுடன் புலிகளுடன் இணைந்து செயல்படுகின்றார்கள்.

அரசாங்கம் இனிமேல் விடுதலைப்புலிகளுடன் பேசாது. ஏனைய கட்சிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடத்தும் என்று கூறுவதில் அர்த்தமில்லை, அவர்களை தமிழ்க்கட்சிகள் என்று சொல்வதற்கில்லை. இவர்கள் அரசாங்கத்தின் காலைப் பிடித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்றார். -ம-சி

## தி மு க

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இல்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய முன்னணியில் அ. தி. மு. க. வை இணைக்கும் முயற்சிகளும் நடைபெற்று வருகிறது. சி

## மட்டு. நுழை வாயிலில் ராணுவ சோதனை முகாம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் நுழை வாயிலில் புதிதாக திடீரென சோதனை முகாம் ஒன்றை இராணுவத்தினர் அமைத்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக இயங்கிவரும் இத்தடை முகாமில் சகல வாகனங்களும், பயணிகளும் அவர்களுடைய பொதிகளும் சோதனையிடப்பட்டு வருகின்றன.


இந்த சோதனை முகாமில் மட்டக்களப்பில் முதல் தடவையாக பெண் இராணுவத்தினரும் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். [கி-சி]

## அதிபர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணைக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3. 00 மணிக்கு புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது சமூகமளிக்கும்படி பிரதிக்கல்விப் பணிப்பாளர், சி நடேசபிள்ளை கேட்டுக் கொள்கின்றார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



(ஏ-5118)

## அறிவித்தல்

யுனிரெக் பொறியியல் நிறுவனத்தில் கடமைபுரியும் சகல தொழிலாளரையும் 24-07-95 திங்கட்கிழமை உடனடியாக வேலைக்குச் சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

முகாமையாளர்,
யுனிரெக் பொறியியல் நிறுவனம்
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

[எ- 5130]

## இராசி பலன்

23-07-1995
ஞாயிற்றுககிழமை
[தமிழுக்கு ஆடி—7]

ஏகாதசி பிற்பகல் 2-13 வரை; ரோகினி சித்தயோகம் ந. இ. 12-51 வரை, இராகு காலம் மாலை 4-32 முதல் 6-02 வரை சுபவேளை காலை 9-02 முதல் 10-32 வரை.

மேடம்: கருத்து மோதல், குடும்ப பிரிவு, உணர்ச்சிப் பிரவாகம்.

இடபம்: தொழில் லாபம், துணிச்சலான முயற்சி, மன நிறைவு.

மிதுனம்: பெற்றோர் கண்டிப்பு, பணக்கஷ்டம், அலைச்சல்

கடகம்: இடம் பெயர்வு, நற்கருமம், தெய்வீகவழிபாடு.

சிங்கம்: உறவினர் சகாயம், உல்லாசம் காரிய சித்தி.

கன்னி: மாமியார் துன்பம், அமைதியின்மை, சுபவிரயம்.

துலாம்: பயனற்ற பிரயாசை, வீண்பழி, பண்பற்ற செயல்.

விருச்சிகம்: வெளியூர் தகவல், நண்பர் சகவாசம், விருந்து.

தனுசு: குடும்பசுகம், புதிய திட்டம், மனமகிழ்ச்சி.

மகரம்: தொழில் மேலாண்மை, பணவரவு, சகோதர நன்மை.

கும்பம்: பணியாளர் பகை, அற்பர் நேசம், வெறுப்பு

மீனம்: குமுறும் நெஞ்சம், எதிர்பாராத பிரச்சனை காரிய தடை.

— ஜோஸ்யர்

### மணிவாக்கு

அடக்கமுடையவர்கள் தவறி நடந்தால் ஆசாரியான் தண்டிக்கின்ருன். துஷ்டர்கள் தவறி நடந்தால் அரசன் தண்டிக்கின்ருன். மறைமுகமாகப் பாவங்கள் செய்பவர்களை யமன் தண்டிக்கின்ருன். ஆகவே தர்மத்திலே மனத்தைச் செலுத்துங்கள். —விதுர நீதி.

## நமது நோக்கு

# நாடாளுமன்றில் பொய்

நாடாளுமன்ற அரசியலில் நம்பிக்கை இல்லாதவர்கள், அதைத் 'திருடர்களின் குகை' என்று வர்ணிப்பர். நாடாளுமன்று அது மட்டுமல்லாது பொய் உரைக்கப்படும் இடமுமாகும்,

யாழ். குடாநாட்டில் 78 சதுரக் கிலோமீற்றர் இடத்தைக் கைப்பற்றி, சிவில் நிர்வாகம் நடத்துகின்றது இராணுவம் என்று எத்தனை தடவை திருப்பித் திருப்பிக் கூறினாலும் உண்மை என்னவென்ருல், ''புலிப் பாய்ச்சல்'' மூலம் விடுதலைப் புலிகளால் இராணுவம் விரட்டி அடிக்கப்பட்டமையேயாகும். ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பக் கூறினல், அது உண்மையாக ஒருபோதும் மாருது ஆனல் பிரதிப பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் பேசும்போது, எதிரிகளைத் தோற்கடிப்பதற்காகவே படையினர் இத் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர் என்றும், பலாலி முகாமுக்குத் திரும்புவதற்கல்ல என்றும், படையினர் தொடர்ந்து முன்னேறிச் செல்வர் என்றும் அறுத்து உறுத்தி, விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தொடங்கப்பட்டுள்ள யுத்தம், திட்டமிட்டதற்கு அமைய அவர்களைத் தோற்கடிப்பதன் மூலம் பூர்த்தி செய்யப்படும் என்று தன் சார்பிலும், ஜனுதிபதியின் சார்பிலும் உறுதியளித்துள்ளார்.

பிரதி அமைச்சர் நாடாளுமன்றில் பேசியது அப்பட்டமான பச்சைப் பொய். கொழும்பில் இப்போது முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை விடுதலைப் புலிகளால் தோற்கடிக்கப்பட்டுவிட்டது என்பது படிப்படியாக எல்லோருக்கும் தெரியவரத் தொடங்கிவிட்டது. இருந்தும் அரசு உண்மையை மூடிமறைக்கப் பார்க்கின்றது. அதற்கேற்ருற்போல் பிரிகேடியர் சரத் முனசிங்காவும் யாழ் நகரைக் கைப்பற்றுவதற்கு இன்னும் நான்கு மைல் தூரம் மட்டுமே உள்ளது. இராணுவம் தாம் கைப்பற்றிய இடங்களைத் தொடர்ந்தும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது என்றெல்லாம் பிதற்றுகிருர்.

தோல்வியை மறைக்க இராணுவம் படாதபாடு படுகின்றது. ஓர் இராணுவத் தள அதிகாரி. போர்த் தந்திரங்களில் ஒன்ருகக் கைப்பற்றிய 78 சதுரக் கிலோமீற்றர் பிரதேசத்தில் உள்ள சில கிராமங்களிலிருந்து துருப்புக்கள் வெளியேறியுள்ளதாகக் கூறியுள்ளார். எடுத்த எடுப்பிலேயே தாங்கள் விடுதலைப் புலிகளால் விரட்டி அடிக்கப்பட்டோம் என்று கூறினல், சிங்கள் மக்கள் அதிர்ச்சி அடைந்துவிடுவார்கள். இராணுவம் வெற்றி கொண்டுவிட்டது, யாழ்ப்பாணத்தைப் பிடித்துவிட்டது என்று மகிழ்ச்சியில் வெடி கொளுத்தி, குளிர்பானம் வழங்கிச் சந்தோசம் கொண்டாடியது பற்றி வெட்கப்படுவார்கள், அரசைத் தூற்றுவார்கள் என்ற பயத்தினுல்தான் தங்களது தோல்வியைப் படிப்படியாகவே வெளியிட முயலுகின்ருர்கள்.

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை தோல்வியில் முடிந்தது பற்றிச் சிங்கள மக்களுக்கு இப்போது தெரியவந்துள்ளமை, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்றத்தில் இராணுவம் ஏன் பின்வாங்கியது? சண்டை எங்கே நடக்கிறது? என்று கிண்டலாக எழுப்பிய கேள்விகளிலிருந்தே அறிந்து கொள்ளலாம்.

இது மட்டுமல்ல, ஈ. பி. டி. பி. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பி. பி. சி.க்கு அளித்த பேட்டியில், இராணுவம் 78 சதுரக் கிலோமீற்றர் பிரதேசத்தைக் கைப்பற்றியது என்று கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை என்று கூறியுள்ளார். அவர்களுக்குத் தள நிலை நன்ருகத் தெரியுமல்லவா?

ஜனுதிபதி சந்திரிகா அண்மையில் பேசும்போது, சுருதி குறைந்த வகையிலேயே தமது பேச்சை ஆற்றியுள்ளார் முன்னர் கூறியதுபோல், இராணுவ நடவடிக்கையினுல் மட்டும் யுத்தத்தை முழுமையாக வெற்றிகொள்ள முடியாது. ஆனுல் அதற்கு நாட்டின் முழுமையான வளங்கள் யாவற்றையும் பயன்படுத்த வேண்டியுள்ளதென்றும், இந்த யுத்தம் மிகவும் கடினமான காரியமாக இருக்கிறது என்றும் கூறியுள்ளார். யுத்தம் கடினமான காரியம் என்பதை, சந்திரிகா விரைவில் காணத்தான்போகின்ருர்.

# இராணுவ டாங்கிகளால் வலி.மேற்கு வீதிகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பகுதி வீதிகள் இராணுவ நடவடிக்கையின்போது பலத்த சேதமடைந்துள்ளன.

இராணுவத்தின் ஷெல்லுக்கும், விமானக் குண்டு வீச்சு

(5ம்பக்கம் பார்க்க)

# சண்டிலிப்பாய் வயல்வெளியில் நடந்த திடீர் 'புலிப்பாய்ச்சல்'

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் 'புலிப் பாய்ச்சல்' தாக்குதல் பெருமளவு வயல் வெளியிலேயே இராணுவத்தின் மீது நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக சண்டிலிப்பாய் வடக்கு, மாகியப்பிட்டி பகுதிகளில் உள்ள பரந்த வயல் வெளிப் பிரதேசத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் தாக்கி ஓட வைத்தது குறிப்பிடத்தக்கது.

மாகியப்பிட்டி பகுதியில் உள்ள பரந்த வயல்வெளியில், இராணுவத்தினர் ''புல்டோசர்'' மூலம் சுமார் 300 யார் தூரத்துக்கு 7 அடி உயரத்தில் பாதுகாப்பு மண் அரணை அமைத்து அதைச் சுற்றி பனை மரக் குத்திகளினுல் பாதுகாப்பு அரண்களை அமைத்திருந்தனர். அத்துடன் ஹெலிகொப்டர்கள் வந்து இறங்கி போகக்கூடிய விதமாக விசேட மேடை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த இடத்தில் ஒரு இராணுவ முகாமை அமைக்கும் விதத்தில், பாரிய மரக்குத்திகள், முகாமைச் சுற்றி முள்வேலிகள் அமைப்பதற்கான முட்கம்பி ரோல்கள், மின்சாரம் பாய்ச்சுவதற்கான கம்பி வயர்கள் போன்ற பல பொருட்கள் பெருமளவில் இறக்கப்பட்டிருந்தன.

இந்த வயல் வெளிப் பிரதேசம் தற்போது, பாரிய யுத்தம் நடைபெற்று ஓய்ந்த பிரதேசமாகவே காட்சியளிக்கின்றது. எங்கு பார்த்தாலும் இராணுவத்தின் சிதைந்த உடல்கள் துர்நாற்றம் வீசியபடி கிடக்கின்றன. இராணுவ சீர் உடைகள், அவர்களின் பாவனைப் பொருட்கள், மழைக்கவசங்கள், படுக்கை விரிப்புகள், மருந்துவகைகள், உணவுப் பொருட்கள், வெடிக்காத ஷெல்கள், இராணுவத்தினரின் தலைக் கவசங்கள், தண்ணீர் கொள்கலன்கள், ஆயிரக்கணக்கான வெற்றுரவைகள் உட்பட ஏராளமான இராணுவ சாதனங்கள் இப் பிரதேசத்தில் தற்போதும் சிதறிக் கிடப்பதைக் காணலாம்.

சண்டிலிப்பாய் பகுதியும் மாகியப்பிட்டிப்பகுதியும் அண்மைய இராணுவ நடவடிக்கையினுல் பொலிவிழந்தே காட்சியளிக்கின்றது.

வி- சி

# போலி டாக்டர் பலவருடம் சேவையில்

(கொழும்பு)

வைத்தியக்கல்லூரியில் பயிலாது, வைத்தியக கலாநிதிப் பட்டமும் பெருது அரசாங்க வைத்தியசாலையொன்றில் பல வருடகாலமாக வைத்தியராகப் பணிபுரிந்த போலி ஆசாமி ஒருவர் தற்பொழுது பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

போலியான வைத்திய கலாநிதி பட்டச் சான்றிதழின் மூலம் வைத்திய சேவையினுள் நுழைந்த இவர் கடந்த ஒருவருடகாலத்திற்கும் மேலாக பாணந்துறை அரசினர் வைத்தியசாலையில் டாக்டராகப் பணிபுரிந்து வந்துள்ளார் என்ற விடயம் பொலிஸாரையும் வைத்தியத்துறையினரையும் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருப்பதாக 'லங்காதீப' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்த போலிடாக்டரைக் கைது செய்துள்ள பொலிஸார், இவருக்கு எவ்வாறு நியமனம் வழப்பப்பட்டது என்பதைக் கண்டறிய சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள் சிலரை விசாரணைக்கு உள்ளாக்கியுள்ளனர்.

கொழும்பிலுள்ள பிரபல தனியார்வைத்தியமனையொன்றில் பல வருடகாலமாக 'வைத்திய நிபுணராகக்' கடமையாற்றிய போலிடாக்டர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இ-சி

# யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்துகள் வருகின்றன

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு வரவுள்ள ''ஹபரண'' கப்பலில் யாழ். போதனு வைத்தியசாலைக்கு இரண்டாம் காலாண்டு மிகுதி தொகுதி மருந்துகள் எடுத்து வரப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது வைத்தியசாலையில் மருந்துகளுக்கு பலத்த தட்டுப்பாடு எற்பட்டுள்ளது.

இதனைதொடர்ந்து வைத்தியசாலை நிர்வாகம் மேற்கொண்ட முயற்சியினுல் மிகுதி தொகுதி மருந்துகளும் ஹபரண கப்பலில் எடுத்து வரப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் ஹபரணவில் 1950 மெ. தொன் மாவும் எடுத்துவரப்படுகின்றது.

170-சி

### இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

படையினரால்

# வட்டு. தபாலகத்திலிருந்து பெருமளவு முத்திரைகள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

முன்னேறிப் பாய்தல் நடவடிக்கையின் போது வட்டுக்கோட்டை தபாலகத்தை இராணுவத்தினர் முற்றுகையிட்டு தபாலகத்தில் இருந்த 8,228 ரூபாபெறுமதி வாய்ந்த முத்திரைகளைக் களவாடி சென்றுள்ளனர்.

இதைவிட தபாலகத்தில் இருந்த 'அயன்சேவை' யும் இராணுவத்தினர் உடைப்பதற்கு முயற்சி எடுத்துள்ளனர், ஆனுல் 'அயன் சேவ்' உடையாத காரணத்தால் அதன் கதவின் கொழுக்கியை அடித்து சேதப்படுத்தி விட்டு சென்றுள்ளனர்.

'அயன் சேவ்'விற்குள் தபாலகத்தின் பெருந்தொகை பணம் இருந்ததாகவும் அயன் சேவ் உடைக்கப்பட்டிருந்தால் இந்த பணத்தையும் இராணுவத்தினர் சூறையாடிச் சென்றிருப்பார்கள் எனவும் வட்டுக்கோட்டை தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

170- சி

### பலதும் பத்தும்

**'அதன் கற்கள்'**

உடலிலுள்ள நச்சுப் பொருட்களை கழிவுப் பொருட்களை வடிகட்டிச் சிறுநீருடன் வெளியேற்றும் தொழில் புரிவது சிறுநீரகம்... தினமும் இதனூடாகப் பெருமளவு இரத்தம் ஓடுகிறது. இதனுல்... நச்சுப பொருட்கள் படிந்து கற்கள் உண்டாகும்.

இந்தக் கற்கள் வெளியேற்றப்படாவிடில்... பலவித துன்பங்களுக்கு மக்கள் ஆளாக நேரிடும்.

இந்தக் கற்கள் தோன்ருது தவிர்ப்பது எப்படி? போதியளவு நீர் குடிக்க வேண்டும். நீண்ட நேரம் சிறுநீரை அடக்கி வைத்திருத்தல் ஆகாது. ''ஒன்றடிகேல்'' என்ற பாடலில் இதனை வலியுறுத்தினுர்கள் எமது முன்னேர்.

அது மாத்திரமல்ல, இறைச்சி, முட்டை போன்ற புரதப் பொருட்களை அளவுக்கு மீறியும் உண்ணக் கூடாதாம்.

—மயூரன்

பிரதேச செயலர்கள் மூலம்

# நிவாரணப் பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

இலவச ஒரு வாரகால நிவாரணம் பெருத வலிகாமம் பகுதி மக்கள் தத்தம் பிரதேச செயலர்களுடன் தொடர்பு கொண்டு நிவாரணத்தை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரசாங்கஅதிபர் தெரிவித்துள்ளார்.

இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து இதுவரை நிவாரணம் பெருதவர்கள் மட்டுமே தத்தம் பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு உலர் உணவை பெற்றுக் கொள்ள முடியும்.

தற்போது வலிகாமம் வழமைக்குத் திரும்பியதை அடுத்து மக்கள் தத்தம் குடியிருப்புக்களில் தங்கியிருப்பதால் நிவாரண விநியோக வேலைகள் அனைத்தையும் அவ்வப் பகுதி பிரதேச செயலர்களே மேற்கொள்வார்கள் எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். 170- சி

# அரசாங்க ஊழியர்க்கு நிரந்தர சம்பளத் திட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்துறையின் தற்போதைய சம்பள அமைப்பு பற்றி ஆராய்ந்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு அரசாங்க மற்றும் கூட்டுத்தாபன துறை அனைத்திற்குமான நிரந்தர சம்பளத்திட்டம்பற்றி சிபார்சு செய்யவுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை எதிர் வரும் செப்டம்பரில் வெளியிடப்படும்.

குறைந்த சம்பளம், சம்பள முரண்பாடுகளால் அரசாங்க துறையின் செயற்பாடுகள் குன்றியுள்ளது-

இந்த ஆணைக்குழுவுக்கு பல தொழிற்சங்கங்கள் தனியார் துறையினர் யோசனைகளை சமர்ப்பித்துள்ளனர் இதுவரை 1.561 எழுத்து மூல யோசனைகள் கிடைத்துள்ளதாக இந்த குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்

தற்போதைய தேவைக்கேற்ப வகையில் அரசாங்க துறைகக்கான சம்பளமுறை ஒன்றை உருவாக்குவதே ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகுமென்று ஆணைக்குழுத்தலைவர் விஜேயசிங்கா தெரிவித்துள்ளார்.

இதற்காக சிங்கப்பூர் மலேசியா போன்ற நாடுகளில் இருந்து புள்ளிவிபரங்களும் சேகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. கே-சி

# ஷெல்லினுல் பலியானவரை ஊரவர்கள் எரித்தனர்

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தைப் பகுதியில் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி வீட்டிலேயே பலியான எஸ். துரைசிங்கம் (55 வயது) என்பவரது பூதவுடலை அவ்வூரவர்கள் பக்கத்து வளவு ஒன்றில் வைத்து எரித்துள்ளனர்.

உரியஇடத்திற்கு கொண்டு சென்று அடக்கம் செய்வதற்கு முடியாமையாலேயே வளவிலுள்ள பூவரச மரங்களை வெட்டி அவரது உடலை எரிப்பதற்கு பயன்படுத்தியதாக அங்குள்ளவர்கள் தெரிவித்தனர் இவ்வாறு அப்பகுதியில் பல சடலங்கள் எரியூட்டப்பட்டதும் தெரிந்ததே. 139-சி

# படையினரின் குடும்ப நலனை கவனிக்க தொண்டர் அமைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் போரிடும் படையினரின் குடும்ப நலனைக் கவனிப்பதற்காகத் தொண்டர் அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

காணி, வன வளப் பிரதி அமைச்சர் நந்தினிஏக்கநாயக்க தலைமையில் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் குழு இத்தொண்டர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பந்தப்பட்ட படையினரின் பிள்ளைகளின் ஊட்டச்சத்து நிலைமை, சுகாதாரம், கல்வி போன்ற அம்சங்களை ஊக்குவிக்க இந்த அமைப்பு நடவடிக்கை எடுக்கும்.

படையினரின் பிள்ளைகளுக்காக விசேட புலமைப் பரிசில் திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட இருப்பதாகப் பிரதி அமைச்சர் செய்தியாளரிடம் கூறினுர்.

இதேவேளை, தேசியப் பாதுகாப்பு நிவாரண அமைப்பு என்ற பெயரில் ஒரு குழு மாதிதளையில் அமைக்கப்பட இருக்கிறது. இதுவும் பாதுகாப்புப் படையினரின் குடும்ப நலனைக் கவனிக்கவே நிறுவப்படவுள்ளது. கே சி

# வயல் வெளிகளில் பொதுமக்களின் உடமைகள்

(கொழும்புத்துறை)

சுழிபுரம், நெல்லியான் வயல்களில் பொதுமக்களின் கதிரைகள், வாங்குகள் உட்படப் பல பொருட்களை எடுத்துச் சென்று பாவித்துவிட்டு இராணுவத்தினர் விட்டுச் சென்றுள்ளனர்.

சில பகுதிகளில் வீதி ஓரங்களில் இருந்த சமையல் பாத்திரங்களையும், வீட்டுத் தளபாடங்களையும் இராணுவம் சென்றதும் திருடர்கள் திருடிச் சென்றதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவம் கைப்பற்றிய இடங்களில் பெரும்பாலான வீடுகளில் இராணுவம் வீடுகளை உடைத்து, பெறுமதிமிக்க பல பொருட்களைத் திருடிச் சென்றுள்ளது.

அநேக வீடுகளில் இருந்த ஆடு, மாடு, கோழிகளைத் தமது உணவாகப் பாவித்துள்ளதுடன், மக்களுக்குப் பலத்த சொத்திழப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளனர். 154 சி

# வதிவிட வேளாண்மை போட்டி 17 பேர் பரிசில் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் நடாத்திய வதிவிட வேளாண்மை போட்டியில் பிரதேச செயலக பிரிவில் 17பேர் பரிசில் பெற்றுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு:

தெய்வேந்திரன் இந்துமதி சுண்டுக்குளி, ரி. டபிள்யூ. ஜெயகுலராசா சுண்டுக்குளி, செல்வராணி தியாகராசா அத்தியடி. வசந்தி தியாகலிங்கம் அரியாலை, முருகேசு சண்முகம் மருதடி, ய ச. இம்மானுவல் கண்டுக்குழி, பூ விஷ்ணுதாஸ் மருதடி, மகேந்திராசா பிரகலாதன் வண்ணர்பண்ணை ச. பே. பயஸ் மருதடி, செல்லையா ரட்ணேஸ்வரன் கொட்டடி, து. மரியரத்தினம் குருநகர், ஜேம்ஸ் ஜெய்றூட் குருநகர், சந்திரன் மகேஸ்வரி குருநகர், கமலநாதன் காண்டீபன் ஈச்சமோட்டை, திருமதி ஜீஸ்கந்ராசா ஈச்சமோட்டை, சிவதராஜா சிவராஜகுமார் ஈச்சமோட்டை, புஸ்பராணி சிவஞானலிங்கம் ஆகியோர் பரிசில் பெற்றவர்கள் ஆவார்.

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் அடுத்த வாரமளவில் இடம் பெறும் என்று யாழ் பிரதேச செயலக உதவி திட்டமிடல் அதிகாரி தெரிவித்தார். 170-சி

## ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

இன்று ஞாயிறு நடைபெறவிருந்த பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது புதிய திகதி பின் அறிவிக்கப்படுமென சங்கத்தின் இணைச் செயலாளர்கள் தெரிவித்துள்ளார்கள்.

## கடைகள் உடைத்து திருட்டு

[கொழும்புத்துறை]

இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம்பெயர்ந்த வேலை தொல்புரம் பகுதியில் இனம் தெரியாதநபர்களால் இப்பகுதியில் உள்ள இருகடைகள் உடைத்து பல பெறுமதிமிக்க பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இதே போன்று பல வீடுகளில் பல பொருட்களும், ஆடு, கோழிகளும் திருடப்பட்டுள்ளன. 154

## திருடர்கள் கைவரிசை

(கொழும்புத்துறை)

மக்கள் இடம் பெயர்ந்த தொல்புரம், மூளாய், பொன்னாலை வடலியடைப்பு உட்பட பல பகுதிகளில் திருடர்கள் மக்கள் இல்லாத வீடுகளில் ஆடு, கோழிகளைக் களவாகக் கொண்டு சென்று மிகக்குறைந்த விலையில் கோழிகளை 75ந்து ரூபாவுக்கும், 100 ரூபாவுக்கும் சில இடங்களில் 2000 ரூபா பெறுமதியான ஆடுகளை 1000 ரூபாவுக்கும் விற்பனைசெய்துள்ளனர். -154

## 'உலக உலா' வெளிவந்தது

(யாழ்ப்பாணம்)

பல புதிய தகவல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும் உள்ளடக்கி இம்மாத 'உலக உலா' வெளிவந்துள்ளது.

பேரொளி மிக்க விண்மீன் நோவாவின் தோற்றமும் மறைவும், நெப்போலியன் ஆட்சிக்கால எகிப்து, ஐஸ்லாந்து நாட்டு வீரகாவியத் தலைவன் வைக்கிவ், மிகச்சிறிய கணணிகள் பற்றிய ரசிகர தகவல், டாங்கிகள் கடலடிக்கு செல்வதன் மர்மம் என்ன?, எதிர்காலத் தொலைத்தொடர்பு விபரங்கள், ஜேர்மனியின் கலைப் பொக்கிசங்கள் ருஸ்யாவிற்கு சென்றது எப்படி?, ருஸ்யாவின் ரகசிய இரசாயன ஆயுதங்கள் பற்றிய திடுக்கிடும் தகவல்கள், முகாமைத்துவ அடிப்படையில் வேகமாக செயற்படுவது எப்படி?, வியர்வை இல்லாமல் மேலதிக ஆயுள் இல்லை- மருத்துவ தகவல், ஜிம்மி காட்டரின் இராஜ தந்திரம், இவற்றுடன் உலக நாடுகளில் நடைபெறும் சமகால நிகழ்வுகள், புதிய கண்டுபிடிப்புகள், கின்னஸ் சாதனைகள் போன்ற பல கட்டுரைகளும் இதில் வெளிவந்துள்ளன. -சி

## சம்பளம் வழங்கப்படவில்லை

(நல்லூர்)

யாழ்.கணக்காய்வு உபஅலுவலகத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான மே மாதம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படவில்லை என தெரியவருகிறது.

இவர்களது சம்பளம் மே மாதத்தில் கொழும்பில் தபால் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு சென்ற அதிகாரிக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

இவர்களது கஷ்ட நிலையை உணர்ந்த யாழ் அரச அதிபர் இவர்களுக்கு சம்பளம் முற்பணம் வழங்கியுள்ளார். சி-175

# மீனுக்குள் இருந்த பாம்பு பெண்ணின் விரலை கடித்தது

(யாழ்ப்பாணம்)

கெழுத்து மீனுக்குள் இருந்த பாம்பு பெண் ஒருவரின் கைவிரலை பதம் பார்த்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

மேற்படி பெண் சந்தையில் இருந்து மீனை வாங்கி வந்து வெட்டிய சமயம் மீன் தலைக்குள் இருந்து சிறிய பாம்புக்குட்டி பெண்ணின் விரலைகடித்தது.

அந்த பெண் பாம்புக்குட்டியை சொப்பிங் பாய்க்குள் போட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்தார். பெண்ணுக்கு டாக்டர் உடனடி சிகிச்சையை மேற்கொண்டதுடன் பாம்புக்குட்டியை பரிசோதிப்பதற்காக சம்பந்தப்பட்ட பெண்ணையும் வார்ட்டில் அனுமதித்துள்ளார். 170-சி

# ஷெல் தாக்குதலினுல் நவாலிப் பாலம் சேதம்

(வட்டுக்கோட்டை)

சங்கரத்தையையும்நவாலியையும் இணைக்கும் நவாலி வெளியில் இருக்கும் பாலமும் (மதகு) ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்துள்ளது.

இப்பாலத்தின் வடக்குப் பக்க பகுதி மாத்திரம் சேதமடைந்தமையால் போக்குவரத்து தடையில்லாது காணப்படுகிறது.

சேதமடைந்த இப்பகுதி விரைவில் திருத்தப்படவேண்டும் இல்லையேல் மழைகாலத்தில் இப்பாதையால் பிரயாணம்செய்யமுடியாத நிலை ஏற்படலாமென கூறப்படுகிறது. 139-சி

# இனவாத அரசியலை தோற்கடிக்க வேண்டும்

(கொழும்பு)

இனவாத அரசியலை தோற்கடித்து அபிவிருத்தியை அடிப்படையாக கொண்டு அதிகாரத்தை பரவலாக்க நடவடிக்கை எடுக்கும் படி 'ஜனதா மித்ரோ' எனும் அமைப்பு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை வலியுறுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கும் படியும் இந்த ஸ்தாபனம் அரசை கேட்டுள்ளது.

முன்பு இந்தியாவின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக விடுதலைப் புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது. தற்போது மேற்கத்திய ஏகாதிபத்திய வாதிகள் அதனை வளர்க்கின்றனர்

அரச சார்பற்ற ஸ்தாபனங்கள் நாட்டின் அரசியலில் தலையிடுவதற்கு இடமளிக்கக் கூடாது என்றும் அந்த அமைப்பின் செயலாளர் பத்திரிகையாளரிடம் தெரிவித்துள்ளார். கே.சி

# உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு யாழ். குடாநாட்டில்எதுவித தட்டுப்பாடும் இல்லையென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், குடாநாட்டில் உணவுபொருட்கள் போதியளவு கையிருப்பில் இருக்கிறது. தொடர்ந்தும் உணவுப்பொருட்கள் கொழும்பிலிருந்து கப்பல்மூலம் எடுத்து வரப்படுகிறது அத்தியாவசிய உணவுப்பொருட்கள் கொழும்பிலிருந்து கப்பல்கள் மூலம் விரைவாக எடுத்துவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுவருவதாகவும் நிவாரணப்பொருட்கள் துரிதமாக இம்மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார். 162-சி

# வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய்ப்பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது. கீழ்க்காணும் விபரப்படி நடைபெறவுள்ள இச்சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித் துறையினர் கேட்டுள்ளனர்.

வலிகாமம்

யாழ்ப்பாணம், நல்லூர். கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் இன்று 23ம்திகதி ஞாயிறு மு ப. 10-30 மணிக்கு குமாரசாமி மண்டபம், யாழ். இந்துக்கல்லூரி.

தென்மராட்சி

தென்மராட்சி பச்சிலைப்பள்ளி உ. அ. அ. பிரிவுகள் இன்று 23ம் திகதி ஞாயிறு பி. ப. 3-00 மணிக்கு டிறிபேக் கல்லூரி சாவகச்சேரி.

வடமராட்சி

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ. பிரிவுகள் நாளை24ம் திகதி திங்கள் பி. ப. 3-00 மணிக்கு மத்திய கல்லூரி நெல்லியடி .வி சி

## சீருடை விநியோகம்

(மானிப்பாய்)

யாழ் செயலகத்தில் பணிபுரியும் அலுவலக ஊழியர்களுக்கு இவ் வருடத்திற்குரிய வெள்ளை சீருடைத்துணிகள் தற்போது வழங்கப்படுகின்றன. 71

# புலிகளுடன் பேச்சு நடத்தியதன்மூலம் சந்திரிகா அரசு தவறிழைத்துவிட்டது!

## ராகுல தேரர் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கு சென்றதன் மூலம் முன்னைய அரசுகள் செய்த அதே பிழையை சந்திரிகாவின் அரசும் புரிந்திருப்பதாக பிரபல பௌத்த குருவான வல்பொல ஸ்ரீராகுல தேரர் நேற்று கொழும்பில் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் அரசியல் வாதிகளும் அழைக்கப்பட்டிருந்த கூட்டமொன்றில் இந்த வல்பொல ஸ்ரீராகுல தேரோ பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

ஐ. தே. க. அரசு பேச்சு வார்த்தையிலீடுபட முன்னர் இப்படியானபேச்சு வார்த்தை வேண்டாமென அப்போதைய ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு நான் சொல்லியிருந்தேன்.

பின்னர் தற்போதைய அரசு பேச்சு வார்த்தையை ஆரம்பித்த காலகட்டத்தில் பேச்சை நிறுத்தி யுத்தத்தை தொடருமாறு சந்திரிகாவுக்கு இரு தடவைகள் நான் கூறியிருந்தேன்.

இப்போதுள்ள ஒரே வழி யுத்தத்தை மேற்கொண்டு நாம் வெற்றி பெற்றதன் பின்னர் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதுதான் எனவும் தேரர் அங்கு பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த 2300 ஆண்டு காலமாக சிங்கள அரசே இருந்து வருகிறது. சனத்தொகையில் 70 சத வீதத்தினர் சிங்கள பௌத்தர்கள் எஞ்சிய 30 சத வீதத்தினரே ஏனையோர். புத்த பெருமானின் வருகையின் போதே இங்கு சிங்கள அரசே இருந்தது எனவும் அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

72 வயதான ஸ்ரீராகுல தேரரின் இந்த உரையை 'ரூபாவாஹினி' நேற்றுக் காலை ஒளிபரப்பியது! -கி-சி

## கிளிநொச்சியில் தங்கியுள்ளோருக்கு உதவ அரச அதிபர் நடவடிக்கை

(கிளிநொச்சி)

வலிகாமம் மேற்கு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்தோரில் ஒரு பகுதியினர் கிளிநொச்சியில் தற்பொழுது தங்கியிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

தெரிந்தவர்களினதும், உறவினர்களினதும் வீடுகளில் தங்கியுள்ள இவர்களுக்கு உதவுவதற்காக கிளிநொச்சி அரச அதிபர் விசேட குழுவொன்றை அமைத்துள்ளார்.

அரசினதும், அரசசார்பற்ற குழுக்களினதும் நிதியுதவியைக் கொண்டு இவர்களுக்கு உதவி வழங்கவும் நடவடிக்கையெடுக்கப் பட்டிருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் தில்லை நடராஜா தெரிவித்துள்ளார். -கி

## யாழ். தபாலகத்தில் முத்திரைக்கு தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்தில் முத்திரைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றன.

தபாலகத்தில் முத்திரைகள் அனைத்தும் முடிவுற்றிருப்பதால் மக்கள் வெளியில் கூடிய விலைகொடுத்து முத்திரைகளை வாங்கி வருகின்றனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக கொழும்பில் இருந்துதபால்பொதிகள் வந்து சேராததினாலேயே முத்திரைகளும் முடிந்துவிட்டன.

இதனைவிட வெளியிடங்களிலும் இரண்டு ரூபா முத்திரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [170-சி]

## அக்கினியை கையில் எடு!

அம்மாவைச் சுற்றியிங்கே
அழுத படியே நடந்தால்
எம்மாடும் வயல் நிலத்தை
உழும்மாடே
சும்மாடு—
தூக்கிப் புலம்பெயர்ந்து
தூரத்தில் ஓடுவதால்
ஆர்க்கும்
விடியலில்லை யே!

வெடிவாலைக் கிளப்பியொரு
வெறும்மாடு துரத்துகையில்
குடிகாரன் போல்நெளிந்து
குப்புறவே
மடிவானேன்—?
அடதோழீ யிளந்தோளா
அக்கினியைக் கையிரண்டில்
தொடு போகும்
துன்பமெல்லாம்
தேய்ந்து!

நிம்மதி

## எதிரியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுன்னாகத்தில் நேற்று இடம் பெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது-

வெற்றியின் விழிம்பில் நிற்கும் உறுதிமிக்க, மனவுறுதி உடைய தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் மேலும் ஆட்பலம் இணைந்து கொண்டால் நாம் விரைவில் தமிழினத்தின் விடிவைக் காணமுடியும் அத்தோடு தமிழீழ மண்ணில் நிலைகொண்டிருக்கும் எதிரியை, இரவோடிரவாக எமது மண்ணில் இருந்து விரட்டியடிக்க முடியும்.

இன்று எதிரி இன அழிப்பில் தான் ஈடுபட்டுள்ளான், அமைச்சர் ரத்வத்தையும், சந்திரிகாவும் அரசியலில் தங்கள் செல்வாக்கை மிகைப்படுத்தவே இந்த போரை ஏவி விட்டுள்ளார்கள்,

இப்பொழுது எதிரி மிகவும் பலவீனமான நிலையிலிருக்கிறான். எதிரியை மேலும் பலவீனப்படுத்த ஆட்பலம்தேவையாக உள்ளது. ஆகவே வீட்டுக்கு ஒருவர் இணைந்து எமது நாட்டைக் காக்க முன்வாருங்கள். அலைந்து திரிந்த யூத இனம் இறுதியில் தமக்கென சொந்த நாட்டை உருவாக்கிய வரலாறும் எம் முன்னே இருக்கிறது.

எதிரியின் போக்கும், நோக்கமும் முழுமையாக தமிழின அழிப்புத்தான். இந்த இன அழிப்பு நடவடிக்கையில் எங்களை பாதுகாக்க வேண்டுமானால் நாங்கள் ஒரு சுதந்திரமான இனமாக, எங்களுடைய தேசிய உரிமைகளை அனுபவித்து வாழக்கூடிய ஒரு மக்களாக, ஒரு நாடாக நாங்கள் எங்களை ஆக்கிக்கொள்வதற்காகத்தான் இந்த போராட்டம் இடம்பெறுகிறது.

இன்று புதிதாக பதவியேற்றுள்ள அரசும், இராணுவத் தளபதியும் மீண்டும் ஒரு பொருளாதாரத் தடையைப் போட்டதும், பூநகரிப் பாதையை திறக்காமலிருப்பதும் ஏற்கனவே அவர்கள் தயாரித்துள்ள போர்முனைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குத்தான்.

பலமுனைத் தாக்குதலால் புலிகளிடமிருக்கும் பலத்தை பகிரலாம் என்ற நோக்கம் தான். பலம் பகிரப்பட்டால் ஏதோ ஒரு இடத்தில் ஏற்படும் பலவீனத்தைப் பயன்படுத்தி குடாநாட்டை கைப்பற்றி போராட்டத்தின் கட்டமைப்பை சிதைக்கலாம். இதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை பின் தள்ளலாம் என்பதுதான் அரசின் நோக்கமாக இருக்கிறது.

இந்த பல முனைத்திட்டம் நடைமுறைப்படுத்தும் போது எங்கள் மக்கள் மத்தியில் பெரிய அழிவு ஏற்படும். எங்களுடைய பிரதேசமும் பெரிய அளவில் பாதிக்கப்படும். இழக்க வேண்டிய சூழ்நிலை வரும்.

எதிரியின் பலமுனைத் திட்டத்தை சீர்குலைக்க வேண்டுமானால் அதற்கு ஈடாக ஆட்பலத்தை எங்களுடைய கைக்குள் வைத்தால்தான், அந்த பல முனைத் தாக்குதலை முறியடிக்கலாம். இதனை எமது தலைவர் விமான எதிர்ப்பு நடவடிக்கையை அறிமுகப்படுத்தியதால் எதிரி பெரும் படையெடுப்பை நடத்த முடியாத சூழ்நிலை வந்தது. இதனால் விமானப்படை செயலிழக்க வைக்கப்பட்டது. கடற்படை கணிசமான அளவு பல மிழக்கப்பட்டது. இது எமது போரட்டத்தின் புதிய பரிமாணமாகவுள்ளது.

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் இ. பராவும் உரையாற்றினர். ம-170-ி-சி

## இரண்டாம் கட்ட

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவர முடியாது. எவ்வாறாயினும் சிலர் எதிர்பார்ப்பது போல் நான்கு அல்லது ஐந்து தினங்களுக்குள் நிறைவேற்றிவிடவும் முடியாது. படையினருக்கு ஏற்படும் உயிரிழப்புகளை ஆகக்குறைந்த மட்டத்திற்கு கொண்டுவரும் வகையிலும் யாழ். குடாநாட்டில் வாழும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணமும் அரசு இராணுவ நடவடிக்கையை வழிநடத்துகிறது.

இந்த யுத்தத்திற்கு ஒரு கால அவகாசம் அவசியமானது. ஆனல் அது மிகவும் நீண்டதாக இருக்காது. யாழ்ப்பாணத்தில் விடுவிக்கப்பட்ட பகுதிகளை படையினர் கைவிட்டு வெளியேறமாட்டார்கள். படையினர் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் தமது நிலைகளை பலப்படுத்தி வருகிறார்கள்.

யாழ்ப்பாணம் வலிமேற்குப் பகுதியில் இராணுவம் கைப்பற்றிய இடங்களிலிருந்து ஒரு போதும் வாபஸ் பெறப்படமாட்டாது. இப்பகுதிகளிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டுள்ளது என்று பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பொய்யானது.

கிழக்கில் புலிகள் விடுக்கும் எத்தவொரு அச்சுறுத்தலையும் படையினரால்வெற்றிகரமாக முறியடிக்க முடியும் என்றார். சி-வி

## இராணுவ

(3ம் பக்கத் தொடர்சி)

களுக்கும் மற்றும் டாங்கிகளாலும் வீதிகள் சேதமடைந்துள்ளன.

வீதிகள் சேதமானதால் போக்குவரத்து செய்யமுடியாது இடம்பெயர்ந்த பாதசாரிகள் பெரும் சிரமப்படுவதை காணமுடிந்தது. [170-கி]

## வடமராட்சி நோக்கி

(1-ம் பக்கத் தொடர்சி)

மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றவிருந்த மாணவனான வல்வை சிதம்பராக் கல்லூரியில் கல்வி கற்கும் திருப்பதி திலீபன் (வயது 18), அதே இடத்தைச் சேர்ந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள செல்வநாதன் சண்முகவேல் (வயது 12), மற்றும் முதலித்தம்பி செல்வரட்ணம் [வயது 45] ஆகியோர் படுகாயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். -51-சி

## வான்வழி மூலம்

(1ம் பக்கத் தொடர்சி)

வழித்தாக்குதல் போன்று இருக்காது என்று இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

2வது உலக மகாயுத்தத்தில் யப்பான் வான்வழி மூலம் 40 அமெரிக்க யுத்தக் கப்பல்களை தாக்கியுள்ளதென்றும் தெரிவித்தது. ம-சி

## வெளிநாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நடவடிக்கையின் நிலை பற்றி வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கு விளக்கமளித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட இரண்டாவது கலந்துரையாடல் இதுவாகும்.

முன்னேறிப் பாய்ச்சல் நடவடிக்கை இடம்பெற்ற வலிமேற்கு, வலிவடக்குப் பகுதிகள் வரை படம்மூலம் மேற்படி வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களுக்கு விளக்கப்பட்டது. ரி சி


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 1995-8-31ம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்

பதவி:
பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி.

சம்பள அளவுத் திட்டம்:
ரூபா 7,300-10X250, 10X325 - 13050 / மாதமொன்றிற்கு.

குறிப்பு:
இத்துடன்;
(அ) நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும்படியாக மேற் குறித்த சம்பளத்தின் 25%இற்கு சமமான தொகை 1995-12-31வரை கொடுப்பனவு செய்யப்படும்.
(ஆ) 1993 மே 12ம் திகதிய 9/93 இலக்க பொது நிருவாகசுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

வயதெல்லை:
40க்கு மேற்படலாகாது.

தெரிவு நேர்முகப் பரீட்சை மூலம்.

விண்ணப்பப் படிவங்களையும், இதர விபரங்களையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக் கிளையில் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் பிரதிப் பதிவாளர்/தாபனக் கிளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களையும், விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் சுய முகவரியிட்டு 2/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23X10செ மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

மேற்படி விண்ணப்பப் படிவங்களையும், இதர விபரங்களையும் கொழும்பு-13, ஆட்டுப்பட்டித் தெரு, 154ம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.


அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகளில் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல்வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும், அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படும்.

ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் வழங்கப்படும். அரசாங்க/கூட்டுத்தாபன சேவையிலுள்ளவர்கட்கும், ஒப்பந்த அடிப்படையில் நியமனம் வழங்குபவர்கட்கும் வயதுக் கட்டுப்பாடு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1995 07-06

(எ 5126)



சண்டிலிப்பாய் பகுதியில் விடுதலைப் புலிகளின் 'புலிப்பாய்ச்சல்' தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் அப்பகுதியில் சிதறிக்கிடப்பதை படத்தில் காணலாம்.

## புலிகளின் குரல் ஊழியர் மரணம்

[யாழ்ப்பாணம்]

'புலிகளின்குரல்' ஒலிபரப்பு நிலையத்தின் பணியாளரான செல்வி பிருந்தா தியாகராஜா நேற்று அதிகாலை யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.

'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது ஆனைக்கோட்டையில் இராணுவத்தினரின் ஷெல் வீச்சினால் படுகாயமடைந்த இவர் கடந்த சில தினங்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் அபாயகரமான நிலையில் சிகிச்சை பெற்று வந்தார். இ

## "யுத்தத்துக்கு யுத்தம் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்"

### — ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

யுத்தத்தினை யுத்தத்தின் மூலமாகவே தீர்வு கண்டு நாட்டில் நிரந்தர அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய துணைப் படை வீரர்களின் பதவியேற்பு வைபவத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்த யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக பல கோடி ரூபா விரயமாக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டம் உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் இல்லாதவாறு மிகவும் சக்தி வாய்ந்த போராட்டமாகும்.

சக்தி வாய்ந்த ஆயுதம் தாங்கிய போராளிகளாக இவர்கள் திகழ்ந்து வருவதனை நாம், அனைவரும் அறிவோம்.

நாம் யுத்தம் செய்து பிரபாகரனையும், அவரது தோழர்களையும் அழித்து ஒழித்துவிட்டாலும் கூட இந்த பிரச்னை தீரப்போவதில்லை.

நாம் பிரபாகரனை ஒழித்துவிட்டாலும் கூட இன்னும் ஒரு பிரபாகரனையோ அல்லது இன்னுமொரு விடுதலைப் புலிகள் இயக்கமோ ஆரம்பமாகக் கூடும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்த நாட்டில் நடந்து வரும் யுத்தத்திற்கு யுத்தம் செய்தே தீர்வுகாண வேண்டும் என்பது எமது நோக்கமல்ல.

எமது சமாதான முயற்சியின் இரண்டாம் கட்டத்தில் இன்று நாம் இறங்கியுள்ளோம். சமாதானத்துக்கு தீர்வு ஏற்படாதபடியால் யுத்தம் செய்தாவது யுத்தத்திற்கு ஒரு முடிவுகட்டி ஒரு சமாதான தீர்வைக் கொண்டுவர வேண்டும் என்பதே எமது அபிலாசை என்றும் அவர் கூறியுள்ளார். ரி-சி

## யாழ். மாவட்ட பாடசாலைகள் நாளை முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாகத் தற்காலிகமாக மூடப்பட்ட யாழ் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

இதற்கு வேண்டிய ஒழுங்குகளைக் கோட்டப் பிரதிக் கல்வி பணிப்பாளர்களும் அதிபர்களும் செய்துள்ளனர். திங்கட்கிழமை தொடக்கம் இரண்டாம் தவணைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகளை அதிபர்கள் மேற்கொள்வார்கள். யாழ். மாவட்டப் பாடசாலைகள் இத்தினத்தில் ஆரம்பித்து நடத்துவதற்கு வேண்டிய ஒத்துழைப்பினை வழங்குமாறு சகலதரப்பினரையும் கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். இ

## நீதிமன்ற அமர்வு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தமிழீழ மாவட்ட நீதிமன்றில் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை தொடக்கம் வழமைபோல நடைபெறும் என்பதை வழக்குகளில் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் தெரியப்படுத்தியுள்ளனர். சி

## தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

வெளியூர்களுக்கான தபால்களை மக்கள் முன்கூட்டியே தபால் பெட்டிகளில் சேர்க்குமாறு யாழ். பிரதம தபாலதிபர் தெரிவித்துள்ளார்.

சேர்க்கப்பட்ட தபால்கள் ஹபரண கப்பல் மூலம் இங்கிருந்து அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் தபால்களை உடனடியாக தபால் பெட்டிகளில் இடுமாறு தபாலதிபர் மேலும் தெரிவித்துள்ளார். 170-சி

## பல்கலைக்கழக அனுமதி 15,000மாக அதிகரிக்கப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியை அதிகரிப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது.

இதன்படி பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படும் மாணவர்களின் தொகையை பதினையாயிரமாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனேகமாக பல்கலைக்கழங்களுக்கான அடுத்த அனுமதியின்போது இவ் அதிகரிப்புச் செய்யப்படலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. -கி-சி

## இடம்பெயர்ந்தோர் நிவாரணம் சொந்த இடங்களில் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

'முன்னேறிப்பாய்தல்' இராணுவநடவடிக்கையால் இடம்பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருந்தோருக்கு இனி சொந்த இடங்களிலேயே உலர் உணவு நிவாரணம் வழங்கப்படுமென நல்லூர் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

இராணுவநடவடிக்கையால் இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் அகதி முகாம், நண்பர், உறவினர் வீடுகளில் தங்கியிருந்தவர்களுக்கு நல்லூர் பிரிவில் ஒரு வார உலர்உணவு நிவாரணம் வழங்குதல் நிறுத்தப்பட்டு, இடம்பெயர்ந்தோரது நிரந்தர பிரதேச செயலர்பிரிவிலேயே இந்நிவாரணத்தைப் பெறுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. -சி

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட அனைத்து அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபன ஊழியர் சங்க நிர்வாகிகள், நலன்புரிச் சங்கங்களின் நிர்வாகிகள், வணிகர் கழகங்கள், வணிக ஊழியர் சங்கம், போக்குவரத்து ஊழியர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், வகுப்பு தொழிலாளர் சங்கம், நகைத்தொழிலாளர் சங்கம் முதலிய தொழில்துறை சார்ந்த அமைப்புக்களின் நிர்வாகிகள், அனைத்து விளையாட்டுக் கழக நிர்வாகிகள் ஆகியோரையும் யாழ். மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இன்று ஞாயிறு பி. ப. 3-00 மணிக்கு நடைபெறவுள்ள விசேட கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (சி)

0 0

(யாழ்ப்பாணம்)

உடுவில் வட்டத்திற்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கம், மகளிர் கிராம அபிவிருத்திச்சங்கம், மகளிர்மன்றம், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்-

## அளவெட்டியில் வீடு பார்க்கச் சென்ற மூவர் இராணுவத்திடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் நடமாடும் பகுதிகளுக்குள் தமது வீட்டைப் பார்த்துவரச் சென்றவர்களில் மூவர் கடந்த வியாழக்கிழமை இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

அளவெட்டிப் பகுதியிலேயே இடம்பெற்ற இச்சம்பவத்தில் அளவெட்டியில் இருந்து இடம்பெயர்ந்த அப்புத்துரை பாலச்சந்திரன் [32 வயது], கந்தவனம் கணேசலிங்கம் [36 வயது], கோபால் குமார் [26 வயது] ஆகிய மூவருமே பிடிபட்டவர்களாவர்.

இவர்களுடன் சென்ற சிலர் தப்பி ஓடி வந்துள்ளனர். -90-சி

## லெப். செல்லக்கிளியின் 12ம் ஆண்டு நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)

லெப். செல்லக்கிளி அம்மானின் 12-ம் ஆண்டு நினைவு வீரவணக்க நிகழ்வுகள் இன்று ஞாயிறு யாழ் மாவட்டத்தில் மூன்று இடங்களில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்கு 20 07-1983ல் சம்பவம் நடைபெற்ற இடமாகிய திருநெல்வேலி தபாற்பெட்டிச் சந்தியில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மான் நினைவுத் தூபியில் நினைவு வீரவணக்கம் செலுத்தப்படவுள்ளது.

மு. ப. 10 மணிக்கு கல்வியங்காட்டில் அமைந்துள்ள செல்லக்கிளி அம்மான் நினைவாலயத்திலும் நினைவு வீரவணக்க நிகழ்வும், கடற்புலி லெப். மகான், லெப். நற்குணம்/ நிரோஜன், வீரவேங்கை சேகர், 2ம் லெப். ஞானமூர்த்தி ஆகிய நான்கு மாவீரர்களின் திருவுருவப் படங்களும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

மாலை 7 30 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு, சங்கீதா வீதியில் அமைந்துள்ள வாலையம்மன் சனசமூக முன்றலில் செல்லக்கிளி அம்மானின் 12ம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும். இதில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நினைவுரையாற்றவுள்ளனர் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். இ

வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

மட்டு–அம்பாறை சிறப்புப் படையணியும், நிதர்சனமும் இணைந்து வழங்கும்

சி. சேரனின்

"உறங்காத கண்மணிகள்"

முழுநீள திரைப்படம்

திரைப்பட வெளியீட்டுப்பிரிவு,
நிதர்சனம்,
தமிழீழம்.

(எ-5119)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office of Lanka under Licence number B/168361?.